Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 10

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

9 ஜமாதியுஸ் ஸானி 1438 ஹிஜ்ரி கமரி 9 அமான் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

9 மார்ச் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து-லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல-னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நான் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதிலிருந்து விலகி சிறிதளவு கூட இங்கும் அங்கும் சென்று விடுவதை ஈமான் இல்லாத நிலையாகக் கருதுகின்றேன். இவற்றை அணுவளவு விட்டு விடுபவர் கூட நரகவாசியாவார் என்பதே எனது கொள்கையாகும். பிறகு இந்த கொள்கையை எனது சொற்பொழிவுகளில் மட்டும் அல்லாமல் ஏறக்குறைய எனது அறுபது நூல்களில் மிக விளக்கமாக நான் எடுத்துக் கூறியுள்ளேன்.**

**நான் உண்மையைக் கூறுகின்றேன். அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்கள் ஆவர். எனது ஜமாஅத், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் திருக்குர்ஆன் மீதும் ஓர் உண்மையான முஸ்லிம் நம்பிக்கை கொள்வதைப் போன்று நம்பிக்கை கொள்கின்றது. ஓர் அணுவளவு கூட இஸ்லாத்திற்கு வெளியே அடியெடுத்து வைப்பது அழிவிற்குக் காரணமாக இருக்கும் என்று நான் உறுதி கொள்கின்றேன்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் மிகவும் வருத்தத்துடனும், உள்ளத்தில் வேதனையுடனும் இந்த விஷயத்தைக் கூறுகின்றேன். அதாவது, சமுதாயம் என்னை எதிர்ப்பதில் அவசரம் காட்டியதோடு மட்டுமல்லாமல் மிகவும் இரக்கமில்லாமலும் நடந்து கொண்டது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பான விஷயத்தில் மட்டுமே கருத்து வேறுபாடு இருந்து வந்தது. அதனை நான் திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறை, நபித்தோழர்களின் ஒருமித்த கருத்து, அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் மற்றும் கடந்த கால வேதங்களில்-லிருந்து நிரூபிக்க வேண்டியதிருந்தது. அதனை நான் நிரூபிக்கின்றேன். மேலும், ஹனஃபிகளின் கொள்கைக்கேற்ப திருக்குர்ஆன் வசனங்கள், நபிமொழி, கியாஸ் மற்றும் மார்க்கச் சட்டத்திலுள்ள ஆதாரங்கள் எனக்கு ஆதரவாக இருந்தன. ஆனால், அந்த மக்கள் முழுமையான முறையில் என்னிடம் இதைப் பற்றி கேட்டு எனது ஆதாரங்களைச் செவிமடுத்துக் கேட்பதற்கு முன்னதாக இந்த விஷயத்தை எதிர்ப்பதில் எந்த அளவு மிகைத்து நிற்கின்றனர் என்றால் அவர்கள் என்னை காஃபிராக்கி விட்டனர். அத்துடன் தாங்கள் விரும்பியதைக் கூறினர். மேலும் என் மீது குற்றம் சுமத்தினர். நேர்மை, நன்மை, இறையச்சம் ஆகியவற்றின் எதிர்பார்ப்பு இதுவாக இருந்தது. அதாவது, முதலில் அவர்கள் என்னிடம் கேட்டிருக்க வேண்டும். நான் அல்லாஹ் கூறியவற்றிற்கும், தூதர் கூறியவற்றிற்கும் மாறு செய்தவாறு வரம்பை மீறி செயல்பட்டிருந்தால் தஜ்ஜால், பொய்யான் போன்ற சொற்களை பயன்படுத்திய-வாறு என்னைப் பற்றி அவர்கள் விரும்பியதைக் கூறுவதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. ஆனால், நான் ஆரம்பத்திலிருந்தே கூறி வருவது போன்று நான் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதிலிருந்து விலகி சிறிதளவு கூட இங்கும் அங்கும் சென்று விடுவதை ஈமான் இல்லாத நிலையாகக் கருதுகின்றேன். இவற்றை அணுவளவு விட்டு விடுபவர் கூட நரகவாசியாவார் என்பதே எனது கொள்கை ஆகும். பிறகு இந்தக் கொள்கையை எனது சொற்பொழிவுகளில் மட்டும் அல்லாமல் ஏறக்குறைய எனது அறுபது நூல்களில் மிக விளக்கமாக நான் எடுத்துக் கூறியுள்ளேன். இரவு பகலாக எனக்கு இதைப் பற்றிய கவலையும் சிந்தனையுமே இருக்கின்றது. பிறகு, இந்த எதிரிகள் இறைவனுக்கு அஞ்சினால் இந்த விஷயம் இஸ்லாத்தை விட்டும் ஒருவரை வெளியேற்றி விடுகின்றது. இதற்கான காரணம் என்ன? அல்லது இதற்கு நீங்கள் என்ன பதில் கூறுகின்றீர்கள்? என்று என்னிடம் கேட்பது அவர்களது கடமை இல்லையா? ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அதை சிறிதளவு கூட பொருட்படுத்தவில்லை. விஷயத்தைக் கேட்டனர். என்னை காஃபிர் என்று கூறி விட்டனர். நான் மிகுந்த வியப்புடன் இவர்களின் இந்த செயலைப் பார்க்கின்றேன். ஏனென்றால், முதலாவதாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் அல்லது அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்ற இந்த விஷயம் இஸ்லாத்தில் நுழைவதற்கு நிபந்தனையாக இருக்கின்ற விஷயம் அல்ல. இங்கும் கூட இந்துக்கள் அல்லது கிறித்தவர்கள் முஸ்லிம்களாகி இருக்கின்றனர். ஆனால் என்ன? அவர்களிடம் இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்வதாக அவர்களை நீங்கள் உறுதிமொழி கூற வைப்பீர்களா? என்பதை பற்றிக் கூறுங்கள். அல்லாஹ்வின் மீதும், மலக்குகள் மீதும், வேதங்கள் மீதும், தூதர்கள் மீதும், நன்மை தீமை ஆகியவற்றிற்கான நியதி அல்லாஹ்விடம் இருந்தே விதிக்கப்படுகின்றது என்பதன் மீதும், மரணத்திற்கு பிறகு எழுப்படுவதன் மீதும் நான் நம்பிக்கை கொள்கின்றேன் என்பதை தவிர வேறு எதையாவது நாம் அப்போது கூற வேண்டியது இருக்கின்றதா? இந்த விஷயம் இஸ்லாத்தின் ஒரு பகுதியாக இல்லாமல் இருந்தும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்ற எனது அறிவிப்பின் காரணமாக இவர் காஃபிர் ஆவார்; தஜ்ஜால் ஆவார். இவர்களை முஸ்லிம்களின் கபருஸ்தானில் அடக்கம் செய்யக் கூடாது. இவர்களது செல்வத்தை கொள்ளை அடிப்பது அனுமதிக்கப்பட்டதாகும். இவர்களது பெண்களை திருமணம் செய்து கொள்ளாமலேயே வீட்டில் வைத்துக் கொள்வது சரியான செயலாகும். இவர்களை கொலை செய்வது நற்கூலியைப் பெற்றுத் தருகின்ற செயலாகும் போன்ற விஷயங்களைக் கூறும் அளவிற்கு, இந்த அளவு ஏன் கடுமை காட்டப்படுகின்றது? ஒரு காலம் இருந்தது. அப்போது ஒருவரது குஃப்ர் அதாவது மறுப்பிற்கான 99 காரணங்கள் அவரிடம் இருந்து அத்துடன் அவர் இஸ்லாத்தில் இருப்பதற்கான ஒரேயொரு காரணம் அவரிடம் இருந்தாலும் கூட அவர் காஃபிர் என்று மார்க்கத் தீர்ப்பு வழங்கக் கூடாது. மாறாக, அவரை முஸ்லிம் என்றே கூற வேண்டும் என்று இதே மவ்லவிகள்தான் கூச்சலிட்டனர். ஆனால், இப்போது என்ன ஆகி விட்டது? நான் அவரை விட மோசமானவனாகி விட்டேனா என்ன? நானும் எனது ஜமாஅத்தும் أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ என்று ஓதவில்லையா என்ன? நான் தொழவில்லையா என்ன? அல்லது எனது சீடர்கள் தொழாமல் இருக்கின்றனரா என்ன? நாங்கள் ரமலான் மாதத்தின் நோன்புகளை நோற்பதில்லையா என்ன? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் வடிவில் நமக்கு போதனை செய்துள்ள அந்த எல்லா கொள்கைகளையும் நாங்கள் பேணி நடக்கவில்லையா என்ன?

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று பங்களாதேஷின் ஆண்டு மாநாடு ஆரம்பம் ஆகின்றது. அல்லாஹ்வின் அருளால் பங்களாதேஷ் ஜமாஅத்தும் மிகுந்த கலப்பற்ற தூய உள்ளம் கொண்டவர்களின் ஜமாஅத் ஆகும். இந்த நாட்டிலும் கூட அங்குள்ள அஹ்மதிகள் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். இவ்வாறே இன்று செராலியோனிலும் ஆண்டு மாநாடு ஆரம்பமாகி இருக்கின்றது.

எந்த நோக்கத்திற்காக இந்த மாநாடுகள் நடத்தப்படுகின்றனவோ அந்த நோக்கத்தின் ஆன்மாவைப் புரிபவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பிறகு, அந்த நோக்கத்தைப் பெறக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். உலகிலுள்ள ஒவ்வோர் அஹ்மதியும் எல்லா சமயத்திலும் இந்த நோக்கத்தை தங்கள் கண் முன்னால் வைத்திருக்க வேண்டும். ஏனென்றால், இவை மூன்று நாட்களுக்கு மட்டும் உரிய நோக்கங்கள் அல்ல. மாறாக, இவை ஓர் அஹ்மதி முஸ்லிமின் முழு வாழ்வின் நோக்கமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஆண்டு மாநாட்டின் சில குறிக்கோள்கள் பற்றி எடுத்துக் கூறியவாறு அவற்றை சான்றாகக் காட்டி ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கியுள்ள முக்கிய போதனைகள்

இன்று எல்லா இடங்களிலும் இஸ்லாம் அவப்பெயருக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் நிலையில் சுயமே முஸ்லிம் நாடுகளில் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் இரத்தத்தின் தாகமுடையவராக இருக்கின்றனர். முஸ்லிம்கள் இஸ்லாத்தின் போதனையை விட்டு விலகி வெகு தொலைவில் சென்று விட்டனர். இந்நிலையில் அஹ்மதிகளாகிய நாம்தான் உலகிற்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளைத் தெரிவிக்க வேண்டும். இதற்கு எல்லாவற்றையும் விட மிகவும் அவசியமான விஷயம் அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்குவதாகும். அல்லாஹ்வின் முன்பு குனிந்து துஆக்கள் செய்ய வேண்டும். நமது பணிகளில் அருள் ஏற்படுவதற்கு அல்லாஹ்விடம்தான் கேட்க வேண்டும். பிறகு நமது செயலளவிலான முன்மாதிரிகள் மூலமாக அழகிய நல்லொழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும். அதன் மூலமாக இஸ்லாத்தின் போதனைக்கு ஏற்ப இறை வணக்கத்தின் உயர்வான தரத்தைப் பார்க்க வேண்டும் என்றால் அதை அஹ்மதிகளிடம் பாருங்கள் என்று கூறும் அளவிற்கு உலகத்திற்கு அது தென்பட வேண்டும். இஸ்லாத்தின் போதனைக்கு ஏற்ப அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள், அழகிய ஒழுக்கம் ஆகிய விஷயங்களில் உயர்வான தரத்தைப் பார்க்க வேண்டும் என்றால் அவற்றை அஹ்மதிகளிடம் பாருங்கள் என்று உலகம் கூற வேண்டும்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**3 பிப்ரவரி 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **3 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۔

இன்று பங்களாதேஷின் ஆண்டு மாநாடு ஆரம்பம் ஆகின்றது. இந்த முறை அவர்களது ஆண்டு மாநாட்டின் இறுதி நாளில் எனது சொற்பொழிவு இருக்காது. எனவே, குத்பாவிலேயே இது பற்றிய விஷயங்களை நான் பேச வேண்டும் என்ற தங்களது விருப்பத்தை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் பங்களாதேஷ் ஜமாஅத்தும் மிகுந்த கலப்பற்ற தூய உள்ளம் கொண்டவர்களின் ஜமாஅத் ஆகும். இந்த நாட்டிலும் கூட அங்குள்ள அஹ்மதிகள் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். 12 அல்லது 13 பேர் அங்கு ஷஹீதாகி இருக்கின்றனர். கொடுமைகளையும் சகித்துக் கொண்டனர். இப்போதும் சகித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், உண்மையான இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் மீதுள்ள நம்பிக்கையிலும் நிச்சய உறுதியிலும் மிகவும் உறுதியானவர்களாக அவர்கள் திகழ்கின்றனர். அல்லாஹ் அவர்களது ஈமானையும் உறுதியையும் எப்போதும் மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்குமாறு செய்வானாக!

இவ்வாறே இன்று செராலியோனிலும் ஆண்டு மாநாடு ஆரம்பமாகி இருக்கின்றது. அங்கும் கூட தட்பவெப்ப நிலையின் காரணமாக அவர்கள் கவலை அடைந்திருந்தனர். பாதுகாப்பு தொடர்பான சில அபாயங்களும் இருந்தன. அவர்களும் மாநாடு எல்லா வகையிலும் அருளுக்குரியதாக அமைய துஆ செய்யுமாறு கூறியிருக்கின்றார்கள். அல்லாஹ் இந்த மாநாட்டையும் அருளுக்குரியதாக ஆக்குவானாக!

எந்த நோக்கத்திற்காக இந்த மாநாடுகள் நடத்தப்படுகின்றனவோ அந்த நோக்கத்தின் ஆன்மாவைப் புரிபவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பிறகு, அந்த நோக்கத்தைப் பெறக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். அந்த மாநாடுகள் பங்களாதேஷ் அல்லது செரலியோன் அல்லது வேறு எந்த நாட்டில் நடந்தாலும் சரியே, நாம் மாநாட்டின் நோக்கத்தை அடைய வேண்டும். அந்த நோக்கம் என்ன? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாநாடு தொடர்பாக கூறியுள்ள அவையே மாநாட்டின் நோக்கங்களாகும். மாநாடு ஆரம்பமாகும் தருணத்தில் பங்களாதேஷில் உள்ளவர்களும் செரலியோனில் உள்ளவர்களும் இந்த விஷயங்களைக் கேட்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களைக் கேட்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். உலகிலுள்ள ஒவ்வோர் அஹ்மதியும் எல்லா சமயத்திலும் இந்த நோக்கத்தை தங்கள் கண் முன்னால் வைத்திருக்க வேண்டும். ஏனென்றால், இவை மூன்று நாட்களுக்கு மட்டும் உரிய நோக்கங்கள் அல்ல. மாறாக, இவை ஓர் அஹ்மதி முஸ்லிமின் முழு வாழ்வின் நோக்கமாகும். எனவே, இந்த நோக்கங்களை எல்லா சமயத்திலும் நம் கண் முன் வைத்திருக்க வேண்டும். 'மாநாட்டின் ஒரு நோக்கம் தூய்மையும் இறையச்சமும் உருவாக வேண்டும் என்பதாகும்' என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

இது தற்காலிகமாக பேண வேண்டிய ஒரு விஷயம் அல்ல. மாறாக, நிரந்தரமாக பின்பற்ற வேண்டிய ஒரு விஷயமாகும். பிறகு மாநாட்டிற்கு வருவது உங்களிடம் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் பற்றிய உண்மையான அறிவை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். இதுவும் நிரந்தரமாகப் பின்பற்றப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். வெறுமனே அச்சப்படுவதைப் பற்றி இங்கு கூறவில்லை. மாறாக, தனது நேசத்திற்குரிய இறைவன் தன் மீது வெறுப்படைந்து விடக்கூடாதே என்ற அச்சம் இருக்க வேண்டும். மாநாட்டிற்கு வருவதன் மூலமாக மாநாட்டின் ஆன்மீக சூழலானது பரஸ்பரம் ஒருவருக்காக மற்றவரது உள்ளத்தில் மென்மையை உருவாக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக அவர்களில் ஒருவர் மற்றவர் மீது வைத்துள்ள அன்பில் முன்னேறிச் செல்ல வேண்டும். பரஸ்பரம் அவர்களுக்கிடையில் எத்தகைய சகோதரத்துவம் உருவாகி விட வேண்டும் என்றால், உலகம் அதை பார்த்து பொறாமை கொள்ள வேண்டும். அதாவது, இத்தகைய முன்மாதிரிகள்தான் உண்மையான இஸ்லாமிய போதனைகளை வெளிப்படுத்துவதாகும் என்று உலகம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்கள் தாழ்மைக் குணத்தையும் பணிவையும் வெளிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும் என்ற விஷயத்தின் அவசியத்தையும் நமக்கு உணர்த்தி இருக்கின்றார்கள். கர்வத்தையும் அகங்காரத்தையும் முற்றிலும் தங்களிடம் இருந்து அவர்கள் வெளியேற்றி விட வேண்டும் என்பதையும் உணர்த்தியிருக்கின்றார்கள். (ஷஹாதத்துல் குர்ஆன் தொகுதி 6 பக்கம் 394,398) தமது ஆன்மீக முன்னேற்றத்தின் தரத்தைப் பெற்று இஸ்லாத்தின் உண்மையான அழகிய போதனையை தமது நாட்டிலுள்ளவர்களிடம் அவர்கள் பரப்ப வேண்டும். எங்கெல்லாம் அஹ்மதிகள் இருக்கின்றனரோ அங்கு அவர்கள் இதனைச் செய்ய வேண்டும். எதிர்ப்புகள் இருந்தால் அவை நமது பணியை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. நுட்பமான ஞானத்துடன் செயல்பட்டவாறு தப்லீக் பணியை எல்லா இடங்களிலும் நாம் தொடர்ந்து செய்து வர வேண்டும். இதுவே நமது குறிக்கோளாகும்.

இன்று எல்லா இடங்களிலும் இஸ்லாம் அவப்பெயருக்கு ஆளாக்கப்பட்ட நிலையில் சுயமே முஸ்லிம் நாடுகளில் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் இரத்தத்தின் தாகமுடையவராக இருக்கின்றனர். முஸ்லிம்கள் இஸ்லாத்தின் போதனையை விட்டு விலகி வெகு தொலைவில் சென்று விட்டனர். இந்நிலையில் அஹ்மதிகளாகிய நாம்தான் உலகிற்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளைத் தெரிவிக்க வேண்டும். இதற்கு எல்லாவற்றையும் விட மிகவும் அவசியமான விஷயம் அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்குவதாகும். அல்லாஹ்வின் முன்பு குனிந்து துஆக்கள் செய்ய வேண்டும். நமது பணிகளில் அருள் ஏற்படுவதற்கு அல்லாஹ்விடம் தான் கேட்க வேண்டும். பிறகு நமது செயலளவிலான முன்மாதிரிகள் மூலமாக

அழகிய நல்லொழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும். அதன் மூலமாக இஸ்லாத்தின் போதனைக்கு ஏற்ப இறை வணக்கத்தின் உயர்வான தரத்தைப் பார்க்க வேண்டும் என்றால் அதை அஹ்மதிகளிடம் பாருங்கள் என்று கூறும் அளவிற்கு உலகத்திற்கு அது தென்பட வேண்டும். இஸ்லாத்தின் போதனைக்கு ஏற்ப அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள், அழகிய ஒழுக்கம் ஆகிய விஷயங்களில் உயர்வான தரத்தைப் பார்க்க வேண்டும் என்றால்அவற்றை அஹ்மதிகளிடம் பாருங்கள் என்று உலகம் கூற வேண்டும். எனவே, இந்த மாநாடு மூன்று நாட்களுக்காக அஹ்மதிகளை ஒன்று திரட்டி மார்க்க விஷயங்களைக் கூறுவதற்காக மட்டும் நடத்தப்படவில்லை. மாறாக, இந்த சுற்றுச் சூழலில் இருந்தவாறு அதாவது இந்த மூன்று நாட்களில் இங்கு உருவாகின்ற இந்த சுற்றுச் சூழலில் இருந்தவாறு தங்களது உள்ளங்களிலுள்ள துருக்களை அவர்கள் அகற்ற வேண்டும். சந்தேகமின்றி கொள்கை அளவில் இங்கு வசிக்கும் அஹ்மதிகள் மிகவும் வலுவாக இருக்கின்றனர். நான் ஏற்கனவே கூறியது போன்றே இதற்காக பங்களாதேஷிலுள்ள அஹ்மதிகள் தங்களது உயிர்களையும் தியாகம் செய்துள்ளனர். ஆனால், இஸ்லாத்தின் மறுமலர்ச்சியின் இந்தக் காலகட்டத்தில் நமது செயலளவிலான நிலைமைகளையும் நாம் உயர்வான தரத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதைத்தான் நம்மில் ஒவ்வொருவரிடமும் அல்லாஹ் விரும்புகின்றான். அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைக்கு ஏற்ப தொழுகைகளைப் பேணுங்கள். உங்களது தொழுகைகளில் தொழுகையின் ஆன்மாவை நிலைநாட்ட முயற்சி செய்யுங்கள். இது தொடர்பாக கடந்த இரண்டு குத்பாக்களில் நான் மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளேன். உங்களது எல்லா தகுதிகளையும் பயன்படுத்தியவாறு அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துங்கள். ஏற்கனவே நான் குறிப்பிட்டது போன்று மாநாட்டின் ஒரு நோக்கம் தூய்மையையும் இறையச்சத்தையும் உருவாக்குவதாகும்.

இறையச்சம் தொடர்பாக விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: தக்வா என்பதன் பொருள் தீமையின் நுண்ணிய வழிகளிலிருந்து விலகி இருப்பதாகும். ஆனால், நினைவில் கொள்ளுங்கள். நான் நல்லவன் என்று ஒரு நபர் கூறுவது மட்டும் நன்மையாகாது. நான் எவரது பொருளையும் அபகரித்துக் கொள்ளவில்லை; எவரது பொருளையும் கொள்ளையடிக்கவில்லை; எவரது உரிமைகளையும் பறிக்கவில்லை; திருடவில்லை; விபச்சாரம் செய்யவில்லை என்று கூறுவது நன்மையாகாது. அத்தகைய நன்மை இறைஞானியின் பார்வையில் நகைப்பிற்குத் தகுதி உடையதாகும். இவை நன்மைகள் அல்ல. இவை பரிகாசம் செய்வதாகும். ஏனென்றால், அவர் இந்த தீமைகளைச் செய்தால், திருடினால், கொள்ளை அடித்தால் அவர் அதற்கான தண்டனையைப் பெறுவார். எனவே, இது ஒன்றும் இறைஞானியின் பார்வையில் மதிக்கத்தக்க நன்மை அல்ல. மாறாக, மனித இனத்திற்கு தொண்டு செய்வதும், அல்லாஹ்வின் வழியில் முழுமையான உண்மையையும் நன்றி உணர்வையும் வெளிப்படுத்துவதும், அவனது வழியில் உயிரையும் கூட தருவதற்குத் தயாராக இருப்பதும் தான் உண்மையான நன்மையாகும்.

எனவேதான் இங்கு إِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا وَّالَّذِيْنَ هُمْ مُّحْسِنُوْنَ அதாவது, தீமைகளிலிருந்து விலகுபவர்களுடனும் அத்துடன் நன்மைகளைச் செய்பவர்களுடனும் அல்லாஹ் இருக்கின்றான் என்று அல்லாஹ் கூறியுள்ளான். **(16:129)**

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தீமையிலிருந்து விலகி இருப்பது மட்டும் எவ்வித சிறப்பிற்கும் உரிய விஷயமல்ல. அத்துடன் எதுவரை நன்மைகளும் செய்யப்படவில்லையோ அதுவரை எவ்வித சிறப்பும் அதில் ஒருபோதும் இல்லை. விபச்சாரம் செய்யாத பல மக்களும் இருப்பார்கள். அவர்கள் கொலை செய்திருக்க மாட்டார்கள். திருடியிருக்க மாட்டார்கள். அவர்கள் கொள்ளை அடித்திருக்க மாட்டார்கள். அவ்வாறிருந்தும்கூட அல்லாஹ்வின் வழியின் அவர்கள் எந்தவொரு உண்மை மற்றும் நன்றியுணர்வின் முன்மாதிரியையும் காட்டவில்லை; இத்தகைய தீமைகளை அவர்கள் செய்யவில்லைதான். ஆனால், அல்லாஹ்வின் வழியில் புகழ்ந்து கூறுவதற்கு தகுதியுடைய அத்தகைய நன்றியுணர்வை அவர்கள் வெளிப்படுத்திக் காட்டவில்லை அல்லது மனித இனத்திற்கு அவர்கள் எந்தத் தொண்டையும் செய்யவில்லை. இதுபோன்ற எந்த நன்மைகளையும் அவர்கள் செய்யவில்லை. எனவே, இந்த விஷயங்களை எடுத்துக் கூறியவாறு தன்னை நன்மை செய்பவர்களில் இடம் பெறச் செய்கின்ற அந்த நபர் அறிவீனர் ஆவார். ஏனென்றால் இவை தீய நடத்தைகளாகும். அவற்றிலிருந்து நான் விலகியிருக்கின்றேன் என்று நினைப்பதனால் மட்டும் ஒரு மனிதன் இறைநேசர்களில் ஒருவராக ஆகி விட முடியாது.

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தீய செயல்களில் ஈடுபடக்கூடியவர்கள், திருடக்கூடியவர்கள் அல்லது நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள், லஞ்சம் வாங்குபவர்கள் ஆகியோருக்கு இங்கு தண்டனை வழங்கப்படுவது இறைவனின் நடைமுறையிலுள்ள விஷயமாகும். அவர்கள் இந்த உலகிலேயே அதற்கான தண்டனையைப் பெற்று விடுகின்றனர். தண்டனையைப் பெறாத வரையில் அவர்கள் மரணிப்பதில்லை. ஏதாவதொரு வகையில் அவர்களுக்கு தண்டனை கிடைத்து விடுகின்றது. நினைவில் கொள்ளுங்கள்! இந்த விஷயங்களிலிருந்து விலகியிருப்பது மட்டும் நன்மை ஆகாது.

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தக்வா (அதாவது தீமைகளிலிருந்து விலகியிருப்பது என்பது) மிகவும் கீழ்நிலையிலுள்ள தகுதியாகும். இதற்கான உதாரணம் இதுவாகும். உயர்ந்த ரகத்திலுள்ள சுவையுள்ள உணவை வைப்பதற்காக ஒரு பாத்திரம் நன்றாக சுத்தம் செய்யப்படுகின்றது. ஒரு பாத்திரத்தை நன்றாக சுத்தப்படுத்தி விட்டு அதை வெறுமனே வைத்து விட்டால் அதில் உணவை இடாமல் இருந்தால் அதனால் வயிறு நிரம்பி விடுமா? ஒருபோதும் நிரம்பாது. காலியாக இருக்கின்ற பாத்திரத்தை முன்னால் வைப்பதன் மூலம் உங்களது வயிறு நிரம்பி விடுமா? ஒருபோதும் அல்ல. இதுபோன்றே தக்வாவை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பிறகு கூறுகின்றார்கள்: தக்வா என்றால் என்ன? தக்வா என்பது நஃப்ஸே அம்மாராவை சுத்தப்படுத்துவதன் பெயர் மட்டுமேயாகும். எல்லா சமயங்களிலும் மனிதனை தீமைகளைச் செய்யத் தூண்டுகின்ற ஆன்மாவே நஃப்ஸே அம்மாராவாகும். தீமைகளைச் செய்த பிறகு எவ்வித வெட்க உணர்வும் ஏற்படாமல் இருக்கும்.

எனவே, தக்வா என்பது நஃப்ஸே அம்மாரா என்ற பாத்திரத்தைச் சுத்தப்படுத்துவதாகும். இந்தப் பாத்திரம் சுத்தமாக ஆன பிறகு அதாவது மனிதன் தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்கும்போது அது தக்வாவின் ஆரம்ப நிலையாகும். பிறகு அந்தப் பாத்திரத்தில் உணவை இட வேண்டும். உணவு என்பது அல்லாஹ் கூறியுள்ள அந்த நன்மைகளாகும். அதில் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளும், அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளும் வந்து விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "நன்மைகள் அந்தப் பாத்திரத்தில்இடப்படுகின்ற உணவுகளாகும். மனித உறுப்புகளுக்கு ஆற்றலை வழங்கி மனிதனிடமிருந்து நற்செயல்கள் வெளிப்படுகின்ற வகையில் அதற்கு தகுதியுடையவனாக அவை அவனை ஆக்கி விடுகின்றன." எனவே, நன்மைகளைச் செய்ய வேண்டும. அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள ஆற்றல்களை வலுப்படுத்த வேண்டும். ஏனென்றால், அவற்றின் மூலமாக அல்லாஹ்விற்குரிய உரிமைகளை செலுத்த வேண்டும். அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும்.

"நற்செயல்கள் மனிதனிடமிருந்து வெளிப்பட வேண்டும். அதன் மூலம் இறை நெருக்கத்தின் மிக உயர்ந்த தகுதியை அவன் பெற முடியும்." (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 241-243; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இந்த இரு விஷயங்களும் அவரிடம் இருந்தால், அவரிடம் நன்மைகள் வளர்ச்சியடைந்து அவரது தக்வாவின் தரமும் உயர்ந்து விட்டால் பிறகு அதன் மூலம் அவருக்கு இறை நெருக்கமும் கிடைத்து விடும். பிறகு ஓர் உண்மையான முஸ்லிம் மிகவும் முக்கியமாக பேண வேண்டிய விஷயம் இறை வணக்கமாகும். துஆ என்றால் என்ன? இறை வணக்கம் என்றால் என்ன? இறை வணக்கமும் துஆக்களும் என்ன அற்புதங்களை காட்டுகின்றன? இவற்றை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும்? அது எப்படி இருக்க வேண்டும்? துஆவின் உண்மை நிலையை அறிவதற்கு என்ன வழிமுறையை கடைபிடிக்க வேண்டும்? பிறகு இதன் மூலமாக அல்லாஹ்வின் நெருக்கத்தை எப்படி பெற முடியும்? இதில் தொழுகையின் பங்கு என்ன இருக்கின்றது? என்ற விஷயத்தை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

'துஆ எத்தகைய விஷ முறிவு என்றால் ஒரு பிடி மண்ணை பொன்னாக அது ஆக்கி விடுகின்றது' துஆவின் மூலமாக அத்தகைய தாக்கம் ஏற்பட வேண்டும். 'அது அகத்திலுள்ள அழுக்குகளைக் கழுவுகின்ற தண்ணீராகும்' ஆனால், எத்தகைய துஆவாக அது இருக்க வேண்டும்?

அன்னார் கூறுகின்றார்கள்: 'இந்த துஆவின் மூலமாக ஆன்மா உருகி விட வேண்டும்' எத்தகைய துஆவாக இருக்க வேண்டும் என்றால் அது உள்ளத்திலிருந்து வர வேண்டும். அத்துடன் ஆன்மா உருகிவிட வேண்டும் 'அது தண்ணீர் போன்று ஓடி ஏக இறைவனின் சந்நிதியில் சென்று விழுகின்றது' அதாவது அவை அல்லாஹ்வின் முன்பு எடுத்து வைக்கப்படுகின்றன. 'அது இறைவன் முன்னிலையில் நிற்கவும் செய்கின்றது. ருகூவும் செய்கின்றது. ஸஜ்தாவும் செய்கின்றது. இதன் நிழல்தான் இஸ்லாம் கற்றுத் தந்துள்ள அந்த தொழுகையாகும்' அதாவது துஆ உள்ளத்திலிருந்து எழுகின்றபோது அமைதியற்ற நிலையில் சில நேரம் அது நிற்கின்றது. சில நேரம் அது ருகூவில் செல்கின்றது. ஸஜ்தா செய்கின்றது. இது ஆன்மாவின் பல்வேறான நிலைமைகளாகும். இதன் வெளிப்படையான நிலைமைகள் இஸ்லாம் கற்றுத் தந்துள்ள தொழுகையில் வெளிப்படுத்தப்படுகின்றது. 'ஆன்மாவில் நிற்றல் என்பது இறைவனுக்காக ஒவ்வோர் அச்சத்தையும் திகிலையும் சகித்தவாறு அவனது கட்டளையை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருப்பதை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.' ஆன்மா ருகூ செய்வது அதாவது குனிவது என்பது ஒருவரை எல்லா விதமான நேசங்களையும் தொடர்புகளையும் விட்டு விட்டு இறைவன் பக்கம் குனிய வைப்பதாகும். இறைவனை விட அதிகமாக பெரிதாக எந்தவோர் உறவும் நேசமும் இருக்கக் கூடாது. மேலும் அந்த ஆன்மா இறைவனுக்காகவே ஆகி விடுகின்றது. 'மேலும் ஆன்மா ஸஜ்தா செய்வது என்பது இறைவனின் சந்நிதியில் வீழ்ந்து தன்னைப் பற்றிய எண்ணத்தை முற்றிலும் தொலைத்து விடுவதாகும். தன்னை முற்றிலும் அழித்து விடுவதாகும்.' எதுவும் மனிதனுக்காக எஞ்சியிருப்பதில்லை. அனைத்தும்

அல்லாஹ்வுக்காக ஆகி விடுகின்றது. தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த தொழுகைதான் இறைவனை சந்திக்க வைக்கின்றது.

தொழுகையின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் இதுதான் உண்மையான தொழுகையாக இருக்கின்றது. இதன் மூலமாகவே இறைவன் கிடைக்கின்றான். அதிகமாக தொழுதோம். அல்லாஹ் எங்களுக்கு கிடைக்கவில்லை என்று மக்கள் கூறுகின்றனர். அவர்கள் இத்தகைய நிலைமையை உருவாக்க வேண்டியது அவசியமானதாகும்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: இஸ்லாமிய ஷரீ அத் இதற்கான நிழற்படத்தை சாதாரண தொழுகையில் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றது. அதன் மூலமாக அந்த பௌதீக தொழுகையானது ஆன்மீக தொழுகை –யின் பக்கம் தூண்டக் கூடியதாக இருக்க வேண்டும்.

ஏனென்றால், இறைவன் மனிதனை எவ்வாறு வடிவமைத்துள்ளான் என்றால் ஆன்மாவின் தாக்கம் உடல் மீதும், உடலின் தாக்கம் ஆன்மாவின் மீதும் கண்டிப்பாக ஏற்படுகின்றது. உங்களது ஆன்மா துக்கத்தில் இருக்கும்போது கண்களிலிருந்து கண்ணீர் வழிகின்றது. ஆன்மா மகிழ்ச்சியாக இருக்கும்போது முகமலர்ச்சி வெளிப்படுகின்றது. எதுவரையென்றால், சில நேரங்களில் அவன் சிரிக்க ஆரம்பிக்கின்றான். அவ்வாறே உடலுக்கு ஏதாவது கஷ்டம் அல்லது வேதனை ஏற்பட்டால் அந்த வேதனையில் ஆன்மாவும் பங்கு பெறுகின்றது. உடல் குளிர்ந்த காற்றினால் மகிழ்ச்சியடையும்போது அதிலிருந்து சிறிது பங்கை ஆன்மாவும் பெறுகின்றது.

“எனவே, உடல் ரீதியான இறை வணக்கத்தின் நோக்கம் என்னவென்றால், ஆன்மாவிற்கும் உடலுக்கும் இடையிலுள்ள தொடர்பின் காரணமாக ஆன்மாவிற்கு அல்லாஹ்வின் பக்கம் செல்வதற்கு அசைவு ஏற்பட வேண்டும்” அதாவது ஆன்மா அல்லாஹ்வின் பக்கம் செல்ல வேண்டும். “மேலும் அது ஆன்மீக நிற்றலிலும் சிரம் பணிதலிலும் ஈடுபட வேண்டும்.” ஏனென்றால், மனிதனின் வெளிப்படையான நிற்றல், குனிதல், சிரம் பணிதல் ஆகியவற்றின் மூலம் எத்தகைய அந்தஸ்து அவனுக்கு கிடைக்க வேண்டும் என்றால் அவை அனைத்தும் ஆன்மீகமானதாக ஆகி விட வேண்டும். ஆன்மா ருகூ செய்ய வேண்டும். ஆன்மா ஸஜ்தா செய்ய வேண்டும். வெளிப்படையான முறையில் மனிதனுக்கு துக்கத்தின்போதும் மகிழ்ச்சியின்போதும் ஏற்படுகின்ற அதே நிலை ஆன்மாவிலும் ஏற்பட வேண்டும். மனிதன் அழவும் செய்கின்றான். சிரிக்கவும் செய்கின்றான். இறைவனுடன் உள்ள தொடர்பிலும் இதே நிலைமையை வெளிப்படுத்த வேண்டும்.

“ஆன்மீக நிற்றலிலும் சிரம் பணிதலிலும் ஈடுபட வேண்டும். ஏனென்றால், மனிதன் முன்னேற்றங் –களைப் பெறுவதற்கு முயற்சிகளின் தேவை உடையவனாக இருக்கின்றான்.” முன்னேற வேண்டுமென்றால் முயற்சிகள் செய்ய வேண்டியது வரும்; உழைக்க வேண்டியது வரும்.

இதுவும் ஒரு வகையான முயற்சியாகும். ஒன்றாக இணைந்துள்ள இரு பொருள்களில் ஒன்றை நாம் எடுத்து விடும்போது அதனுடன் இணைந்துள்ள அடுத்த பொருளில் சிறிது அசைவு ஏற்படும் என்பது வெளிப்படையான ஒரு விஷயமாகும். ஆனால் உடலளவிலான நிற்றல், ருகூ செய்தல், ஸஜ்தா செய்தல் ஆகியவற்றால் மட்டும் எந்தப் பலனும் ஏற்படாது. இந்த பங்கைப் பெறுவது இறைஞானத்தைப் பெறுவதில் அடங்கி இருக்கின்றது. இறைஞானம் இறைவனின் அருளாலேயே கிடைக்கின்றது. (லெக்சர் சியால்கோட். ருஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 223-224) அவர்கள் பிறிதோரிடத்தில் இதற்கு இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள்: அதாவது, எல்லாமே அல்லாஹ்வின் அருளால்தான் கிடைக்கின்றது. ஆனால், அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்கும் அல்லாஹ்வின் முன்னால் குனிய வேண்டும்; அவனிடமே கேட்க வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் இந்த இறைஞானம் கிடைக்கும்போதுதான் ஒருவருக்கு உண்மையான தொழுகையும் கிடைக்கும். இதற்காக முயற்சி செய்வதும் உழைப்பதும் அவசியமானதாகும். தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும். முயற்சி செய்யும்போதுதான் நாம் படைக்கப்பட்டதன் நோக்கத்தையும் நம்மால் பெற முடியும். தக்வாவும் உண்மையான இறைவணக்கமும் எப்போது முழுமை அடையும் என்றால் இப்போது இதற்கு முன்னர் ஒரு மேற்கோளிலிருந்து நான் விளக்கிக் கூறியிருப்பது போன்று அதற்காக இரு விஷயங்களை நாம் செய்ய வேண்டும். அல்லாஹ்விற்குரிய உரிமைகளைச் செலுத்த வேண்டும். அடியார்களுக்குரிய உரிமை –களையும் செலுத்த வேண்டும்.

தக்வாவும் உண்மையான இறைவணக்கமும் அத்துடன் அடியார்களுக்குரிய உரிமைகளையும் நாம் செலுத்தும்போதுதான் அவை முழுமை அடைகின்றது. இந்த விஷயத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “அசல் விஷயம் என்னவென்றால் எல்லாவற்றையும் விட கடினமானதும் இக்கட்டான நிலையும் அடியார் –களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதில்தான் இருக்கின்றது.” மக்கள் தொழுகைகளை நிறைவேற்று –கின்றனர். பள்ளிவாயில்களுக்கும் வருகின்றனர். சந்தாவும் கொடுக்கின்றனர். ஆனால், சில நேரங்களில் உயிர்களையும் தியாகம் செய்கின்றனர். ஆனால், சில நேரங்களில் எத்தகைய சந்தர்ப்பங்கள் வந்து விடுகின்றன என்றால் அப்போது மக்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளைச் செலுத்துவது அவர்களுக்கு மிகவும் கடினமானதாக ஆகி விடுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எல்லாவற்றையும் விட கடினமானதும் இக்கட்டான நிலையும் அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதில்தான் இருக்கின்றது. அதாவது, எல்லா நேரமும் இதனை எதிர்கொள்ள வேண்டியது வருகின்றது. ஒவ்வொரு நொடியும் இந்த சோதனை நம் முன்னால் இருந்து வருகிறது. எனவே, இந்நிலையில் மிகவும் எச்சரிக்கையுடன் அடியெடுத்து வைக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னுடைய கொள்கை என்ன –வென்றால், எதிரியுடன் கூட அளவுக்கு அதிகமாக கடுமையுடன் நடந்து கொள்ளக் கூடாது. சிலர் இயன்ற –வரை அந்த எதிரியின் நாசத்திற்கும் அவர் அழிந்து போவதற்கும் முயற்சி செய்ய வேண்டும் என்று விரும்புகின்றனர். பிறகு இதே கவலையில் இருந்தவாறு இதற்காக ஆகுமான மற்றும் அனுமதிக்கப்படாத வழிகளைக் கடைபிடிப்பதைக் கூட அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அவருக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக பொய்யான அவதூறுகளை அவர் மீது சுமத்துகின்றனர். அவர் மீது பொய்யைப் புனைந்து கூறுகின்றனர். அவரைப் பற்றி புறம் பேசுகின்றனர். மற்றவர்களை அவருக்கு எதிராகத் தூண்டுகின்றனர்.

இப்போது கூறுங்கள். “சாதாரண பகைமையின் காரணமாக அவர்கள் எந்த அளவு தீமைகளுக்கு வாரிசாகி விடுகின்றனர்? பிறகு இந்த தீமைகள் தமது பிள்ளைகளை ஈன்றெடுக்கும்போது (அதாவது ஒரு தீமையிலிருந்து இன்னொரு தீமை உருவாகும் போது) பிறகு இந்த தீமைகள் தமது பிள்ளைகளை ஈன்றெடுக்கும்போது இதன் விளைவு எதுவரை சென்று சேரும்? நான் உண்மையாகவே கூறுகின்றேன். எவரையும் உங்களது சொந்த பகைவராக ஒருபோதும் கருதாதீர்கள். காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படும் இந்த பழக்கத்தை முற்றிலுமாக விட்டு விடுங்கள். இறைவன் உங்களுடன் இருந்து நீங்களும் இறைவனுக்காக ஆகி விட்டால் அவன் எதிரிகளைக் கூட உங்களது தொண்டர்களை சார்ந்தவர்களாக ஆக்கி விட முடியும். ஆனால், நீங்கள் இறைவனுடன் உள்ள தொடர்பையே முறித்துக் கொள்வீர்கள் என்றால், மேலும் அத்துடன் அவனுடன் உள்ள நட்புறவில் எதுவும் எஞ்சியிருக்கவில்லை என்றால் அவனது விருப்பத்திற்கு மாற்றமாக செயல்பட்டால் பிறகு இறைவனை விட உங்களுக்கு பெரிய எதிரி வேறு யார் இருக்க முடியும்? படைப்பினங்களின் பகைமையில் இருந்து மனிதனால் தப்பிக்க முடியும். ஆனால், இறைவன் உங்கள் எதிரியாகி விட்டால் பிறகு எல்லா படைப்பினங்களும் சேர்ந்து உங்களுக்கு நண்பர்களாக இருந்தாலும் அதனால் எதுவும் நடக்க முடியாது. எனவே, உங்களது வழிமுறை நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் கடைபிடித்தது போன்ற வழிமுறையாக இருக்க வேண்டும். எந்த சொந்த பகையும் இருக்கக் கூடாது என்பதே இறைவனின் விருப்பமாக இருக்கின்றது. நன்றாக நினைவில் கொள்ளுங்கள். மனிதன் எவர் மீதும் சொந்த பகை வைக்காமல் இருந்தால்தான் அவருக்கு சிறப்பும் நற்பாக்கியமும் கிடைக்கின்றது. எவர் மீதும் சொந்த பகை இருக்கக் கூடாது. எனினும், அல்லாஹ் மற்றும் தூதரின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக அந்தப் பகைமை இருந்தால் அது வேறு விஷயமாகும். அதாவது, எந்த நபர் அல்லாஹ்விற்கு அவனது தூதருக்கு மதிப்பளிக்காமலும் இன்னும் சொல்வதென்றால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் எதிரியாக இருக்கின்றாரோ அவரை நீங்கள்


## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**

ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.

Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**

**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005

O.A. NIJAM - 99947 571772
V.A. SAIT - 99430 30230

## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

உங்களது எதிரியாகக் கருதுங்கள். ஆனால், அவரை எதிரியாகக் கருதுவது என்பதன் பொருள் நீங்கள் அவர் மீது இட்டுக்கட்டி பொய்யான விஷயங்களைக் கூறுவதல்ல. காரணமின்றி அவருக்கு துன்பம் இழைப்பதற்கு திட்டம் தீட்டுவதல்ல. ஒருபோதும் இதற்கு பொருள் இதுவல்ல. மாறாக, அவரை விட்டுப் பிரிந்து தனியாக சென்று விடுங்கள். மேலும் அவரது விவகாரத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுங்கள்.

உங்களுக்கு இது சாத்தியம் என்றால் அவரது சீர்த்திருத்தத்திற்காக துஆ செய்யுங்கள். உங்கள் தரப்பிலிருந்தும் அவருடன் எந்த புதிய சண்டையையும் ஆரம்பித்து விடாதீர்கள். இது நஃப்ஸை தூய்மைப் படுத்துவதுடன் தொடர்புடைய விஷயமாகும்.'' பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒரு எதிரியுடன் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். இறைவனுக்காக மட்டுமே அவருடன் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அவனை தனக்கு கீழே விழச் செய்தார்கள். அவனது நெஞ்சின் மீது ஏறி அமர்ந்தார்கள். அப்போது உடனே அவன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களது முகத்தில் துப்பினான். அவர்கள் உடனடியாக அவனது நெஞ்சிலிருந்து கீழே இறங்கி விட்டார்கள். அவனை விட்டு விட்டார்கள். ஏனென்றால், இதுவரை நான் இறைவனுக்காக மட்டும் உன்னுடன் போரிட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், இப்போது நீ எனது முகத்தில் துப்பியதன் காரணமாக இப்போது எனது நஃப்ஸின் கொஞ்சம் பங்கும் இதில் வந்து சேர்ந்து விடுகின்றது. எனவே, நான் எனது நஃப்ஸிற்காக உன்னை கொலை செய்வதை விரும்பவில்லை என்று கூறியவாறு அந்த எதிரியை அவர்கள் விட்டு விட்டார்கள். இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால், தனது நஃப்ஸின் எதிரியாக இருக்கும் ஒருவனை அவர்கள் எதிரியாகக் கருதவில்லை.

எனவே, இதுபோன்ற இயல்பையும் பழக்கத்தையும் உங்களிடம் நீங்கள் உருவாக்க வேண்டும். தன்னை ஏற்றுக் கொண்டவர்களைப் பார்த்து அன்னார் கூறுகின்றார்கள்: உங்களது சுய பேராசையின் காரணமாகவும் சுய நோக்கங்களுக்காகவும் எவருக்காவது நீங்கள் துன்பமிழைத்தால் அல்லது அவருடன் உள்ள பகைமையின் தொடரை விரிவாக்கிக் கொண்டே சென்றால் பிறகு இதை விட இறைவனுக்கு வெறுப்பூட்டக்கூடிய வேறு என்ன விஷயம் இருக்க முடியும்? (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 104-105; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, எந்தவொரு சொந்த பகையின் காரணமாகவும் எவருக்கும் துன்பமிழைக்கக் கூடாது. மேலும், அல்லாஹ் மற்றும் தூதரின் எதிரியை உங்களது எதிரியாகக் கருதுங்கள். அவர் இருக்கும் இடத்திலிருந்து எழுந்து சென்று விடுங்கள். அவருக்காக துஆ செய்யுங்கள். அவரை சீர்திருத்த முயற்சி செய்யுங்கள். அவரது தாக்குதல்களுக்கு அனுமதிக்கப்பட்ட வழிகளின் மூலம் பதில் கூறுங்கள். ஆனால், அந்த எதிரியின் ஒவ்வொரு விஷயத்தையும் தீயதாகக் கருதியவாறு எதிரிகளுக்கு எதிராக முழுமையான முறையில் தவறான வழிமுறையைக் கடைபிடித்தவாறு பகைமை காட்டுவதும் தவறாகும்.

அல்லாஹ் நமக்கு இறையச்சத்தைப் பற்றிய உண்மையான அறிவையும் அதனைப் புரிந்து கொள்ளும் தன்மையையும் வழங்குவானாக! நம் மீது அருள் புரிந்தவாறு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரக்கூடிய வகையில் நமது தொழுகைகளும் இறைவணக்கங்களும் இருக்கும்படி செய்வானாக! இறையடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளின் நுட்பமான வழிகளைப் புரிந்து கொள்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! நமது ஒவ்வொரு செயலும் அது உலகத்துடன் தொடர்புடையதாக இருந்தாலும் நாம் எந்நிலையிலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும். அதற்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதை செய்பவர்களாக இருக்க வேண்டும். அதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

★ ★ ★ ★

## காதியானில் நடைபெற்ற 122 -வது ஆண்டு மாநாடு தொடர்பான சுருக்கமான அறிக்கை

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நபிக்கும் ஒரு விருப்பம் இருக்கின்றது. எனது விருப்பம் இறை வணக்கம் செய்வதாகும் என்று கூறினார்கள். ஒரு நபித்தோழர் இவ்வாறு கூறுகின்றார்கள்: நான் ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் இறை வணக்கம் செய்வதைப் பார்த்தேன். அவர்களது நெஞ்சத்தில் இருந்து ஆட்டுரல் சுழல்வதுபோன்ற ஓர் ஓசை வந்து கொண்டிருந்தது என்று கூறப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், இரவில் நின்று தொழுவதை விட்டு விடாதீர்கள். ஏனென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் அதனை ஒருபோதும் விட்டு விடவில்லை. அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது உட்கார்ந்து தொழுவார்கள். நோயும் பலவீனமும் இருந்தும் கூட இன்று இரவு கூட அவர்கள் நீண்ட சூராக்களை ஓதினார்கள் என்று ஒருமுறை கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் அவர்களது இந்த துடிப்பைக் கண்டனர். அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றி நடந்தனர். எவர்கள் முதலில் இணை வைப்பவர்-களாக இருந்தனரோ அவர்கள் எந்த அளவு இறைவனை வணங்குபர்களாக ஆகி விட்டனர் என்றால், பின்னர் வரக்கூடியவர்களுக்கு அவர்கள் முன்மாதிரியாகத் திகழ்ந்தனர்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சஹாபாக்களின் நிலை எவ்வாறு இருந்தது? பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நபித்தோழர்-களிடம் என்ன புரட்சியை ஏற்படுத்தினார்கள்? وَيَأْكُلُوْنَ كَمَا تَأْكُلُ الْأَنْعَامُ கால்நடைகள் உண்பதுபோன்று அவர்கள் உண்டார்கள் என்ற நிலையிலிருந்து يَبِيْتُوْنَ لِرَبِّهِمْ سُجَّدًا وَّقِيَامًا அவர்கள் தங்கள் இறைவனுக்-காக சிரம் பணிந்தும் நின்றும் (வணங்கியவர்-களாக) இரவுகளைக் கழிக்கின்றனர் என்ற நிலையை அவர்கள் அடைந்து விட்டனர். (25:65) இதற்கு இணையான ஒன்று உலகின் எந்த ஒரு சமுதாயத்தின் வரலாற்றிலும் நமக்கு கிடைக்க முடியாது. இந்த உண்மையை காலம் ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தது.

இந்தக் காலத்தில் இந்தப் புரட்சியை உருவாக்குவதற்காகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்-பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பினான். நம்மை நாமே ஆய்வு செய்து பார்ப்பதும் சிந்திப்பதும் நமது பணியாக இருக்கின்றது. நபிமார்கள் உலகில் உண்மையை பரப்புவதற்காக வருகின்றனர். அதிலும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மிகவும் உயர்வான இடத்தை அடைந்-திருக்கின்றது. அதாவது, எதிரிகள் கூட அவர்களது உண்மையை ஏற்றுக் கொண்டிருந்-தனர். ஒருமுறை பகைவர்கள் தங்களுக்கிடையே இவ்வாறு ஆலோசனை செய்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு மந்திரவாதி என்று நாம் அனைவரிடமும் கூற வேண்டும். மேலும், அவர்கள் ஒரு பொய்யர் என்பதையும் பரப்ப வேண்டும் என்று அவர்கள் கூறினர். அப்போது நஸர் பின் ஹாரிஸ் என்பவர் முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களுக்கு மத்தியில்தான் இளைஞரானார். எல்லாரையும் விட அதிகமாக நம்பிக்கைக்குரியவராகவும் உண்மை-யாளராகவும் அவர் இருந்தார். இப்போது அவர் ஒரு தூதுச்செய்தியைக் கொண்டு வந்ததும் அவர் ஒரு பொய்யர் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அவர்கள் பொய்யரும் அல்ல; மந்திரவாதியும் அல்ல; குறி சொல்பவரும் அல்ல; கவிஞரும் அல்ல; பைத்தியக்காரரும் அல்ல என்று கூறினார்.

ஒருமுறை அபூஜஹில் நான் உங்களை பொய்யன் என்று கூற மாட்டேன். மாறாக, நீங்கள் கொண்டு வந்துள்ள போதனையைத்தான் பொய் என்று கூறுகின்றேன் என்று கூறினான். பெருமானார் (ஸல்) அவர்கள் நான் இவ்வளவு நீண்ட காலம் உங்கள் மத்தியில் வாழ்ந்தேன். உங்களால் கூட என்னை பொய்யன் என்று கூற முடியாது. முழு வாழ்விலும் நான் உண்மையையே பேசி வந்திருக்கும்போது இன்று பொய்யாக எனது போதனைகளை எவ்வாறு நான் கூறுவேன்? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நபிமார்கள் உண்மையின் மூலமாகவே தங்களை ஏற்றுக் கொள்ள வைக்கின்றனர். فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا مِّنْ قَبْلِهٖ நான் இதற்கு முன்னர் உங்களிடையே ஒரு நீண்ட வாழ்நாளைக் கழித்திருக்கின்றேனே! இதன் பிறகும் நீங்கள் ஏன் உணர்வதில்லை? என்ற வசனத்தின் சாட்சியம் திருக்குர்ஆனில் இருக்கின்றது. (10:17) எனவே, இந்த நபியை ஏற்றுக் கொள்பவர்கள் தமது தரம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டியதும் அவசியமானதாகும்.

பெருமானார் (ஸல்) அவர்களின் இன்னொரு நற்பண்பைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வெற்றிகளை வழங்க வழங்க அவர்கள் தாழ்மைக் குணத்தைப் பேணுவதில் முன்னேறி வந்தார்கள். ஒரு நபர் அவர்களிடம் வந்ததும் அச்சத்தால் நடுங்கிக் கொண்டிருந்தார். அவரிடம் பெருமானார் (ஸல்) அவர்கள் என்னைப் பார்த்து ஏன் நீங்கள் பயப்படுகின்றீர்கள்? நான் ஒரு மூதாட்டியின் மகன் ஆவேன் என்று கூறினார்கள்.

எவரும் தமது செயல்களின் காரணமாக ஈடேற்றத்தைப் பெற முடியாது என்று ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சஹாபாக்கள் உங்களுக்கும் இதே நிலைதானா? என்று கேட்டனர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஆம்! இறைவன் தனது கருணையால் என்னை சூழ்ந்து கொள்ளாத வரை எனது நிலையும் அவ்வாறானதுதான் என்று கூறினார்கள். யாரைப் பற்றி அல்லாஹ் அவரது கை எனது கையாக இருக்கின்றது என்று கூறினானோ அவர் இறைவன் மீதுள்ள அச்சத்தில் எந்த அளவு முன்னேறியுள்ளார்? 'ஒருபோதும் உங்கள் இறைவனிடம் நன்றி கேடு காட்டாதீர்கள். அவனுடன் உள்ள உறவை விட்டு விடாதீர்கள்' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உலகில் வெற்றிகள் கிடைக்கும்போது மக்கள் ஃபிர்அவ்ன்களாக ஆகின்றனர். ஆனால், முழுமை பெற்ற மனிதரின் முன்மாதிரி எப்படி இருந்தது? எந்த நகரம் அநீதியிழைத்தவாறு அவர்களை வெளியேற்றியதோ மேலும் இஸ்லாத்தை இவ்வுலகிலிருந்து அழிக்க விரும்பியதோ அல்லாஹ்வின் நியதிக்கேற்ப அந்த மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது பெருமானார் (ஸல்)

அவர்கள் எந்நிலையில் அதில் நுழைந்தார்கள்? வரலாறு இதைப் பற்றி இவ்வாறு கூறுகின்றது. அதாவது, வெற்றி வீரராக மிகவும் மகிமையுடன் அவர்கள் மக்காவில் நுழைந்த அந்த நாள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மகிழ்ச்சியின் நாளாக இருந்தது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் இந்த அருள்களை வெளிப்படுத்துவதில் பணிவின் உச்சக்கட்ட தரத்தில் இருந்தார்கள். இறைவன் அவர்களை எந்த அளவு உயர்த்தினானோ அந்த அளவு பெருமானார் (ஸல்) அவர்கள் தாழ்மையுடன் குனிந்து கொண்டே இருந்தார்கள். எதுவரையென்றால் அன்னாரது தலை குனிந்து குனிந்து ஒட்டகத்திலுள்ள திமிலில் பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! நமது நபி (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்டபோது அன்னார் துன்பத்தின் நாட்களில் குனிவதுபோன்று தலை குனிந்தார்கள்; ஸஜ்தா செய்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய நற்பண்புகளை பல சபைகளில் கூறினாலும் கூட அதை கூறி முடிக்க முடியாது. அவர்களது அழகிய முன்மாதிரியின் ஓர் அழகிய அம்சம் அன்னாரிடம் இருந்த வள்ளல் தன்மையாகும். அதைப் பற்றி இப்போது நான் கூறுகின்றேன். பெருமானார் (ஸல்) அவர்களை விட அதிகமாக வாரி வழங்குகின்ற வேறு எவரையும் நாங்கள் பார்த்ததேயில்லை என்று சஹாபாக்கள் கூறினர். ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களிடம் சிறிது வழங்குமாறு சில அன்ஸாரிகள் கேட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் கொடுத்தார்கள். மீண்டும் அன்ஸாரிகள் கேட்டனர். மீண்டும் அன்னார் அவர்களுக்கு வழங்கினார்கள். மீண்டும் அவர்கள் கேட்டனர். அப்போதும் பெருமானார் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள். எதுவரையென்றால் இருந்தவை அனைத்துமே முடிந்து போய் விட்டன.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னிடம் உள்ள பொருளை நான் உங்களிடம் இருந்து தடுத்து வைத்துக் கொள்வதில்லை. ஒருமுறை 90 ஆயிரம் திர்ஹம்களை அன்னார் பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஆடுகளின் எவ்வளவு பெரிய மந்தையை அன்னார் கொடையாக வழங்கினார்கள் என்றால், அவை ஒரு பள்ளத்தாக்கு முழுவதையும் சூழ்ந்திருந்தது. பஹ்ரைனிலிருந்து வந்திருந்த செல்வங்களை அன்னார் பள்ளிவாயிலில் குவித்து வைத்திருந்தார்கள். தொழுகைக்குப் பிறகு எல்லா செல்வங்களையும் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள். சில நேரங்களில் காட்டரபிகள் கூட மிகவும் அதட்டுகின்ற தொனியில் அன்னாரிடம் வழங்குமாறு கேட்ட சமயத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் அதையும் கூட பொருட்படுத்தாமல் அவர்களுக்கு வழங்கினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிமார்கள் மீது வறுமையின் காலமும் வருகின்றது. செழிப்பின் காலமும் வருகின்றது. அதன் மூலமாக அவர்களது முன்மாதிரி தெரிய வருகின்றது. அதிகாரமும் ஆற்றலும் இருக்கும்போது மன்னிப்பதுதான் உண்மையான மன்னித்தல் ஆகும். மன்னிக்கின்ற பண்பை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு ஆற்றலும் அதிகாரமும் இருக்க வேண்டியது அவசியமான -தாகும். ஒருவர் மீது பலவீனமான மற்றும் அதிகாரத்தை வெளிப்படுத்துகின்ற இந்த இரு நிலைமைகளும் வரும்போதுதான் இருவகையான ஒழுக்கங்களும் அவரிடம் வெளிப்பட முடியும். இவ்விஷயத்தில் எல்லாரையும் விட முதலாவதாக அடியெடுத்து வைத்திருப்பவர்கள் காத்தமுர் ருஸுல் (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்கள் மீது இந்த இரண்டு நிலைமைகளும் வந்தன. அவற்றின் மூலமாக அவர்களது எல்லா ஒழுக்கங்களும் சூரியனைப் போன்று வெளிப்பட்டு விட்டன.

நன்றி செலுத்துதல் என்பது இன்னொரு உயர்ந்த பண்பாகும். இதன் மிக உயர்ந்த தரத்தை பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியில் நம்மால் பார்க்க முடிகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துவது மற்றும் அடியார்களுக்கு நன்றி செலுத்துவது ஆகியவற்றில் மிக உயர்வான முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். எதுவரையென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மழையின் முதல் துளியை தமது நாவில் ஏந்திக் கொள்வார்கள். இதுவும் நன்றி தெரிவிக்கும் ஒரு வழிமுறையாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் உணவு மிகவும் எளிமையான உணவாக இருந்தது. அதற்காகவும் அவர்கள் அணிந்து வந்த எளிமையான ஆடைகளுக்காகவும் கூட அவர்கள் இறைவனுக்கு நன்றி தெரிவித்து வந்தார்கள்.

ஒருமுறை உங்களது எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டு விட்டன. அவ்வாறிருந்தும் நீங்கள் ஏன் இந்த அளவு அழுது அழுது இறைவணக்கம் செய்கின்றீர்கள்? என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், எனது இறைவன் எனக்கு இந்த அளவு வழங்கியிருக்கும் போது நான் என் இறைவனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டாமா? என்று கேட்டார்கள்.

அடியார்களுக்கு நன்றி செலுத்துவதில் பெருமானார் (ஸல்) அவர்களின் தரம் எவ்வாறு இருந்தது? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் நண்பராக இருந்தார்கள். ஒருமுறை ஒருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து ஏதோ கூறி விட்டார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லாரையும் விட அதிகமாக என் மீது அபூபக்ர் பேரருள் செய்துள்ளார் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது யார் என்ன பேரருள் செய்துவிட முடியும்? தொண்டு செய்பவருக்கு தான் இதில் பெருமை இருக்கின்றது. ஆனால், அவ்வாறிருந்தும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் தமது நன்றியுணர்வை வெளிப்படுத் -தினார்கள். ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களிடம் நீங்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். ஆனால், அவர்களை விட மேலான மனைவிமார்களை அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ளான் என்று கூறியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) அவர்கள் செய்த தொண்டுகளை எடுத்துக் கூறினார்கள். மேலும், எப்போதும் அதற்காக நன்றி தெரிவித்து வந்தார்கள்.

மன்னர் நஜ்ஜாஷி அவர்கள் செய்த பேருதவி -யையும் பெருமானார் (ஸல்) அவர்கள் எப்போதும் நினைவில் வைத்திருந்தார்கள். தனது சொல்லாலும் செயலாலும் அதற்காக நன்றி தெரிவித்து வந்தார்கள். ஒருமுறை மன்னரின் குழு ஒன்று வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை வரவேற்பதற்கு தாமே எழுந்து நின்றார்கள். மேலும் அவர்கள் நமது தோழர்களுக்கு கண்ணியமளித்துள்ளார். எனவே, அவர் செய்த பேருதவிக்காக சுயமே நானே கைமாறு செய்வதை நான் விரும்புகின்றேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறுதியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் துஆ செய்தார்கள். துஆவிற்கு பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் -தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மேடை -யிலேயே அமர்ந்திருந்தார்கள். காதியானில் உள்ளவர்கள தங்களது கூட்டுப் பாடலை ஆரம்பியுங்கள் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். ஹுஸூர் அவர்களின் இந்த கட்டளையை நிறைவேற்றும் வகையில் காதியானில் இருந்து குத்தாம், அத்ஃபால், மற்றும் நாஸிராத்தின் குழுக்கள் பல்வேறு கூட்டுப் பாடல்களைப் பாடினர். கூட்டுப் பாடல்கள் பாடப்பட்ட பிறகு ஹுஸூர் அவர்கள் இலண்டனிலிருந்த ஜமாஅத் சகோதரர் -களிடம் இப்போது தொழுகை நிறைவேற்றப்படும். அதற்குப் பிறகு உணவிற்கான ஏற்பாடு செய்யப் -பட்டுள்ளது என்று கூறினார்கள்.

பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். “காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 14,342 ஆகும். இந்தோனேஷியாவிலிருந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்தவர்களை ஒரு தனி விமானம் இந்த அருளுக்குரிய மாநாட்டிற்குக் கொண்டு வந்து சேர்ந்திருக்கின்றது. மேலும் இலண்டனிலிருந்து (நேரடி ஒளிபரப்பின் மூலமாக) இந்த மாநாட்டில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை 5,230 ஆகும்.”

## பெண்களுக்கான மாநாடு

27 டிசம்பர் 2016 அன்று ளுஹர் தொழுகைக்குப் பிறகு பகல் 2:30 மணிக்கு லஜ்னா இமாயில்லாஹ் தங்களது தனி அமர்வை நடத்தினர். இந்த அமர்விற்கு இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் மதிப்பிற்குரிய தலைவியான நஸீம் அஹ்தர் கியானி சாஹிபா அவர்கள் தலைமை தாங்கினார்கள். மதிப்பிற்குரிய வெஹ்மிதா உமர் சாஹிபா அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். ஓதப்பட்ட வசனங்களின் உருது மொழியாக்கத்தை இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் பொதுச்செயலாளரான மதிப்பிற்குரிய அமத்துஷ் ஷாஃபி ரோமி சாஹிபா அவர்கள் படித்தார்கள். மதிப்பிற்குரிய நய்யரா தன்வீர் சாஹிபா அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதையை அழகிய குரலில் பாடினார்கள். இந்த அமர்வில் முதலாவதாக “திருக்குர்ஆன், நபிமொழி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரது கலீஃபாக்களின் கட்டளைகளின் ஒளியில் பர்தாவைப் பேணும் கடமையும் அதன் முக்கியத்துவமும்” என்ற தலைப்பில் இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் கௌரவ செயற்குழு உறுப்பினரான மதிப்பிற்குரிய புஷ்ரா பாஷா சாஹிபா அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். மதிப்பிற்குரிய குத்ஸிய்யா ஹபீப் சாஹிபா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து எழுதப்பட்ட ஒரு கவிதையை அழகிய குரலில் பாடினார்கள். “திருமணம் மற்றும் வரன் பார்ப்பது தொடர்பாக திருக்குர்ஆன், நபிமொழி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அன்னாரது கலீஃபாக்களின் கட்டளைகள்” என்ற தலைப்பில் இந்த அமர்வில் இரண்டாவதாக இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவியான மதிப்பிற்குரிய நஸீம் அஹ்தர் சாஹிபா அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். கூட்டுத் துஆவுடன் இந்த அமர்வு நிறைவை எட்டியது.

### (I) அல்கலம் ஃப்ராஜெக்ட்

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்களின் அனுமதியுடன் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் தேதி வெள்ளிக் கிழமையன்று மாலை 4.00 மணிக்கு சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியானின் தலைவரான மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் அவர்களின் தலைமையில் காதியானில்

உள்ள அஹ்மதிய்யா தலைமையக நூலகத்தில் “அல் கலம் ஃப்ராஜக்ட்” -ன் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய முர்ஷிது அஹ்மது டார் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அதற்குப் பிறகு தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸி காதியானின் கூடுதல் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் ஆன மவ்லவி இனாயத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் “அல் கலம் ஃப்ராஜக்ட்” தொடர்பாக தமது அறிமுக சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். இந்த ஃப்ராஜக்டின் கீழ் பேனாவின் மூலமாக கைகளால் எழுதப்பட்ட முழு திருக்குர்ஆனின் பிரதியை வெளியிடுவதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த ஃப்ராஜக்ட் 23 டிசம்பர் 2016 முதல் 1 ஜனவரி 2017 வரை பத்து நாட்கள் நடைபெற்றது. இந்த நாட்களில் மொத்தம் 1284 ஜமாஅத் சகோதரர்கள் திருக்குர்ஆனின் 1483 வசனங்கள் தமது கைகளால் எழுதியுள்ளனர்.

(2) பொதுத் தொண்டுத் துறை

பொதுத் தொண்டுத் துறையின் ஏற்பாட்டின்கீழ் ஆண்டு மாநாடு நடைபெறும் நாட்களில் தாருல் மஸீஹ் தலைமையகப் பள்ளிவாயில்கள், பெஹஷ்தி மக்பரா ஆகிய இடங்களிலும், மாநாட்டுத் திடலிலும் எல்லா தங்குமிடங்களிலும் அல் கலம் ஃப்ராஜக்ட் நடைபெற்று வந்த தலைமையக நூலகத்திலும் முஸ்லிம் தொலைகாட்சி அஹ்மதிய்யாவின் கட்டடத்திலும் குத்தாம் மற்றும் அன்ஸாரின் தன்னார்வத் தொண்டர்கள் எல்லா நேரங்களிலும் டியூட்டி கொடுத்து வந்தனர். தொழுகை நேரங்களில் பள்ளிவாயில்கள், தெருக்கள் மற்றும் சாலைகளில் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்காக குத்தாம் டியூட்டி கொடுத்தனர். அய்வானே ஹித்மத்தில் வருகையை பதிவு செய்யும் துறையின் ஏற்பாட்டின் கீழ் வருகை தந்திருந்த விருந்தினர்களின் பழைய கார்டுகள் பதிவு செய்யப்பட்டன. தற்காலிக புதிய கார்டுகளும் புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தியாவின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து வருகை தந்திருந்த 720 குத்தாம், 86 அன்ஸார் மிகவும் உழைத்தவாறு அர்ப்பணிக்கும் மனப்பாங்குடன் இரவு பகலாக டியூட்டி கொடுத்து வந்தனர் - அல்ஹம்துலில்லாஹ். இராணுவம் மற்றும் காவல்துறையில் பணிபுரிகின்ற 15 அஹ்மதி இளைஞர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தனர். அவர்களும் தாமாக முன் வந்து தொண்டாற்றியதுடன் மட்டுமல்லாமல் மிகவும் உழைத்தவாறு டியூட்டி கொடுத்தனர்.

(3) துறைகளும் தங்குமிடங்களும்

இந்த வருடம் மாநாட்டின் ஏற்பாடுகளை கவனிக்கவும் விருந்தினர்களை தங்க வைப்ப -தற்கும் அவர்களின் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கும் 27 துறைகளும் 21 தங்குமிடங்களும் உருவாக்கப்பட்டன. 4 லங்கர்கள் (உணவகங்கள்) இயங்கி வந்தன. காதியானில் உள்ள எல்லா ஹல்காக் -களிலும் வீடுகளில் தங்கியிருந்த விருந்தினர் -களுக்காக 6 இடங்களில் குடும்பத்தினர் மூலமாக உணவு பரிமாறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(4) Homeopathy First

ஹுஸூர் அவர்களின் அனுமதியுடன் Homeopathy First India என்ற துறை நிறுவப்பட்டிருக்கின்றது. இந்த துறையின்கீழ் கடந்த ஆறு மாதங்களாக படைப்பினங்களுக்குத் தொண்டு புரியும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் இந்த பணிகளை புகைப்படங்களின் வடிவில் எடுத்துக்காட்டும் நோக்கத்துடன் சராயே வஸீமிற்கு அருகில் ஒரு கண்காட்சி நடைபெற்றது. அதிகமான எண்ணிக்கையில் ஜமாஅத் சகோதரர்கள் இந்தக் கண்காட்சிக்கு வருகை தந்தனர். மேலும் இதற்காக தமது சக்திக்கேற்ப பொருளுதவியும் செய்தனர்.

(5) நிக்காஹ்களுக்கான அறிவிப்பு:

ஆண்டு மாநாட்டின் நாட்களில் மஸ்ஜிது அக்ஸாவில் மொத்தம் 28 நிக்காஹ்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது. அவற்றில் 20 நிக்காஹ் -களுக்கான அறிவிப்பு 2016 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் 27 ஆம் தேதியன்று செய்யப்பட்டது.

(6) கண்காட்சி:

2015 ஆம் ஆண்டின் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் ஹல்கா தாருஸ் ஸலாமிலுள்ள ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களது பெரிய வீட்டை சீரமைத்து அங்கு “அந்நூர் நுமாயிஷ்”(அந்நூர் கண்காட்சி) என்ற பெயரில் ஒரு கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டது. இந்த வீட்டில்தான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது வாழ்நாளின் இறுதி நாட்களைக் கழித்தார்கள். இந்த வருடமும் 23 டிசம்பர் 2016 முதல் 2 ஜனவரி 2017 வரை மொத்தம் பத்து நாட்கள் இதே வீட்டில் கண்காட்சி நடத்தப்பட்டது. கண்காட்சியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றின் பல்வேறு காலக்கட்டங்கள் புகைப்படங்கள் மூலமாகவும் சுவரொட்டிகள் மூலமாகவும் காட்டப்பட்டன. தினந்தோறும் காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இந்தக் கண்காட்சி பார்வையாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இதைத் தவிர நஸாரத் நஷ்ரோ இஷாஅத்தின் ஏற்பாட்டின்கீழ் நஷ்ரோ இஷாஅத் கட்டடத்தின் வளாகத்தில் திருக்குர்ஆன் கண்காட்சியும் மஹ்ஸனே தஸாவீர் என்ற பெயரில் புகைப்படக் கண்காட்சியின் துறையும் நிறுவப்பட்டிருந்தது. மாநாட்டின் நாட்களில் அதிகமாக ஜமாஅத் சகோதரர்கள் இந்தக் கண்காட்சிகளைக் கண்டு பயனடைந்தனர்.

(7) தப்லீக் கூட்டமும் கேள்வி பதில் நிகழ்ச்சியும்:

2016 ஆம் ஆண்டின் ஆண்டு டிசம்பர் 29 ஆம் தேதி திங்கட்கிழமையன்று காதியான் ஆண்டு மாநாட்டின் முதல் நாளில் மக்ரிப் இஷா தொழுகை -களுக்குப் பிறகு ஹல்கா தாருல் அன்வாரிலுள்ள மஸ்ஜிது அன்வாரில் மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப் அவர்களின் தலைமையில் புதிதாக பைஅத் செய்தவர்கள் மற்றும் தப்லீகின் கீழுள்ள சகோதரர்களுக்காக ஒரு தப்லீக் கூட்டம் நடைபெற்றது. ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ள புதிதாக பைஅத் செய்துள்ளவர்கள் மற்றும் தப்லீகின் கீழுள்ள நண்பர்கள் கேள்விகள் கேட்டு தங்களுக்குள் இருக்கும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே இக்கூட்டத்தின் நோக்கமாக இருந்தது. மேலும் இதன் மூலம் அஹ்மதியல்லாத சகோதரர்கள் அவர்களிடம் கேட்கின்ற கேள்வி -களுக்கான பதிலையும் அவர்கள் பெற முடிந்தது. அந்தக் கேள்விகளுக்கு அவர்களால் பதில் கூற முடியாமல் அவர்கள் சிரமப்பட்டு வந்தனர்.

மஸ்ஜிது அன்வாரில் ஏறக்குறைய புதிதாக பைஅத் செய்த 500 பேர் மற்றும் தப்லீகின் கீழுள்ள சகோதரர்கள் ஆகியோர் தமது பகுதியைச் சார்ந்த முபல்லிக்குகள், முஅல்லிம்கள் மற்றும் பழைய அஹ்மதி சகோதரர்களுடன் அங்கு வந்திருந்தனர். தமது கேள்விகளைக் கேட்டு அதற்கான பதிலையும் பெற்றனர். கூட்டம் திருக்குர்ஆன் ஓதுவதுடன் ஆரம்பமானது. ஜமாஅத்தின் முபல்லிக்கான மதிப்பிற்குரிய மவ்லவி முர்ஷிது அஹ்மது டார் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். மதிப்பிற்குரிய ரிஸ்வான் அஹ்மது ஸஃபர் சாஹிப் அவர்கள் நஸம் பாடினார்கள். அதற்குப் பிறகு மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப் அவர்கள் துவக்கவுரை நிகழ்த்தினார்கள். தமது உரையில் அவர்கள் அஹ்மதிகளுக்கும் அஹ்மதி அல்லாதவர்களுக்கும் இடையிலுள்ள அடிப்படை வித்தியாசம் மற்றும் கருத்து வேறுபாடுகள் குறித்து தெளிவாக எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பிறகு கேள்விகள் கேட்பதற்கான வாய்ப்பு வழங்கப் -பட்டது. மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப் அவர்களுடன் நாஸிம் இர்ஷாத் வக்ஃபே ஜதீதான மதிப்பிற்குரிய மவ்லானா சுல்தான் அஹ்மது ஸஃபர் சாஹிப் அவர்களும், தஃவத்தே இலல்லாஹ்வின் துணை நாஸிரான மதிப்பிற்குரிய மவ்லானா தன்வீர் அஹ்மது காதிம் சாஹிப் அவர்களும் சகோதரர்களின் கேள்விகளுக்கு பதில் கூறினார்கள். இந்தக் கூட்டம் ஈமானுக்கு மிகவும் எழுச்சியூட்டக் கூடியதாக இருந்தது. மேலும் இக்கூட்டம் இரண்டரை மணி நேரம் நடைபெற்றது.

(8) மொழிபெயர்ப்புத் துறை:

இந்த வருடம் கீழ்க்காணும் 9 மொழிகளில் மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளின் உடனடி மொழியாக்கத்திற்கான ஏற்பாடு செய்யப் -பட்டிருந்தது. 1) அரபி 2) ரஷ்யன் 3) இந்தோ -னேஷியன் 4) ஆங்கிலம் 5) மலையாளம் 6) தமிழ் 7) தெலுங்கு 8) வங்காளம் 9) கன்னடம்.

அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் எல்லா மொழிகளின் மொழிபெயர்ப்பாளர்களும் மிகவும் உழைத்தவாறு மொழிபெயர்க்கின்ற தமது கடமையை சிறப்பாக நிறைவேற்றினர். மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளும் குறிப்பாக ஹுஸூர் அவர்களின் நிறைவுரையும் மேற்கண்ட 9 மொழி -களில் மொழிபெயர்க்கப்பட்டன. அதிகமான எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் மொழியாக்கத்திலிருந்து பயனடைந்தனர். பெண்கள் மாநாட்டின் சிறப்பு அமர்வின் எல்லா நிகழ்ச்சிகளும் கீழ்க்காணும் 5 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. 1) ஆங்கிலம் 2) அரபி 3) இந்தோனேஷியன் 4) மலையாளம் 5) தமிழ்.

(9) தர்பிய்யத் துறை :

காதியான் ஆண்டு மாநாடு நடைபெற்ற நாட்களில் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி முதல் 2 ஜனவரி 2017 வரை மஸ்ஜிது அக்ஸா, மஸ்ஜிது முபாரக், முஹல்லா தாருல் அன்வாரில் உள்ள மஸ்ஜிது அன்வார் ஆகிய பள்ளிவாயில் -களில் தஹஜ்ஜுது தொழுகை ஜமாஅத்தாக நிறைவேற்றப்பட்டது. இவ்வாறே காதியானின் முஹல்லாக்களிலுள்ள ஏனைய பள்ளிவாயில் -களிலும் ஆண்டு மாநாடு நடைபெற்ற மூன்று நாட்களிலும் ஜமாஅத்தாக தஹஜ்ஜுது தொழுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. தஹஜ்ஜுத் தொழுகைக்காக சகோதரர்களை ஒலிபெருக்கியின் மூலம் ஸலவாத் ஓதுவதன் மூலம் எழுப்புவதற்கான ஏற்பாடு இருந்தது. இந்த துறையின் மூலம் காதியானின் பல்வேறு தெருக்களிலும் சாலைகளிலும் கல்வி மற்றும் சீர்திருத்தம் தொடர்பான வாசகங்கள் அடங்கிய பல்வேறு அழகான பதாகைகள் (பேனர்கள்) கட்டப்பட்டிருந்தன. இதை தவிர உருது மற்றும் ஆங்கில மொழிகளில் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகள் புத்தக வடிவில் கலர் டைட்டிலுடன் வெளியிடப்பட்டிருந்தது. அதில் ஆண்டு மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) மற்றும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) ஆகியோர் வழங்கி இருந்த பொன்னான வழிகாட்டல்கள் இடம் பெற்றிருந்தன.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 9 March 2017 Issue No. 10

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

(IO) பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் :

இந்த வருடம் 11 மொழிகளில் 206 பத்திரிகைகளில் ஆண்டு மாநாடு தொடர்பாக 282 செய்திகளும் கட்டுரைகளும் வெளி வந்தன.

✯ ஆண்டு மாநாடு தொடர்பாக 16 சிறப்பு Suppliment -களும் 41 பத்திரிகை -களில் 43 விளம்பர பிரசுரங்களும் வெளி வந்தன. இவ்வாறே 27 நியூஸ் சேனல்கள் 29 முறை மாநாடு தொடர்பான செய்தியையும் நிகழ்ச்சியையும் ஒளிபரப்பின. மாநாட்டின் கவரேஜிற்காக 57 நிருபர்கள் வருகை தந்திருந்தனர். இவர்களில் 13 நிருபர்கள் பஞ்சாபிற்கு வெளியில் இருந்து வந்திருந்தனர். ஆண்டு மாநாட்டை விளம்பரப்படுத்துவதற்காக பஞ்சாப் மாநிலத்திலுள்ள சண்டிகர் மற்றும் ஜலந்தர் மாவட்டங்களிலும் ஒரிஸா மாநிலத்திலுள்ள சோரோவிலும் பத்திரிகையாளர்களின் மாநாடு நடைபெற்றது.

(அறிக்கை : மன்சூர் அஹ்மது மஸ்ரூர் - அறிக்கைத் துறையின் அமைப்பாளர்)

# அஹ்மதிய்யத் ஓர் அறிமுகம் - சிறப்புக் கருத்தரங்கு

கடந்த 5.2.2017 அன்று மாலை 5.00 மணிக்கு கோட்டார் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக அஹ்மதிய்யத் ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கு நடைபெற்றது.

திருநெல்வேலி, கன்னியாகுமர் மாவட்ட அமீர் ஜனாப் A.P.Y. அப்துல் காதிர் சாஹிப் தலைமை தாங்கினார்கள். கோட்டார் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் ஸயீம் சாஹிப் முன்னிலை வகித்தார்கள். மவ்லவி ஷஃபீக் அஹ்மது சாஹிப் திருக்குர்ஆன் ஓதி அதன் தமிழாக்கத்தை வாசித்தார்கள். இதனைத் தொடர்ந்து கோட்டார் ஜமாஅத்தின் தலைவர் ஜனாப் முஹம்மது முஹையுத்தீன் சாஹிப் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள்.

அடுத்து மேலப்பாளையம் ஜமாஅத்தின் அமீர் ஜனாப் A. நாஸிர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) மரணம் குறித்து திருக்குர்ஆன், நபிமொழிகளின் ஒளியில் சிறப்புரை ஆற்றினார்கள். பிறகு பொறுப்புப் பிரச்சாரகர் மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது சாஹிப், இமாம் மஹ்தி (அலை) அவர்களின் உண்மைக்கு சான்றாக திருக்குர்ன், ஹதீஸ்கள் கூறும் முன்னறிவிப்புகளை விளக்கிக் கூறி, வானமும் பூமியும் அவர்களின் உண்மைக்கு சாட்சியாக இருப்பதை உணர்ந்த மக்கள் சிந்தித்து நேர்வழி பெற வேண்டும் என்று கூறினார்கள்.

பத்ர் தமிழ் பத்திரிகையின் துணை ஆசிரியர் மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப் கத்மே நுபுவ்வத் என்ற தலைப்பில் ஆற்றிய உரையில், காத்தமுன்னபிய்யீன் என்றால் நபித்துவம் முற்றுப்பெற்று விட்டது என்பது பொருளல்ல. மாறாக, பெருமானார் (ஸல்) அவர்கள் நபிமார்களை உருவாக்குபவர்கள் ஆவார்கள் என்பதே அதன் பொருள் என்றும், இந்த சிறப்பை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே திருக்குர்அன் வழங்கியுள்ளது என்றும், அவர்களின் இந்த மேன்மையினை முஸ்லிம்களில் பலர் புரியாதது பரிதாபத்திற்குரிய ஒன்றாகும் என்றும் குறிப்பிட்டார்கள்.

மவ்லவி A.P.A. நாஸிர் அஹ்மது சாஹிப் அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியது என்ன? என்ற தலைப்பில் உரை ஆற்றினார்கள். அவர் தமது உரையில் முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா சேனல் மூலம் இஸ்லாத்தின் ஒளியை உலகம் முழுவதும் 24 மணி நேரமும் பரவச் செய்யும் ஒரே ஜமாஅத் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும்தான் என்று குறிப்பிட்டார்கள். தொடர்ந்து பேசிய அவர் நோயாளிகள், நலிவுற்றோர், அனாதைகள், விதவையர், ஏழைகள் ஆகிய அனைவருக்கும் எவ்வித பாகுபாடுமின்றி அஹ்மதிய்யா ஜமாஅத் செய்யும் மகத்தான தொண்டினை விரிவாகப் பட்டியலிட்டார்கள்.

இறுதியாக உரையாற்றிய மாவட்ட அமீர் சாஹிப் அவர்கள், பெயரளவிலான இஸ்லாத்திற்கு புத்துயிரையும், புது வாழ்வையும் அளிப்பதற்காகத்தான் அஹ்மதிய்யத் உலகில் தோன்றியது என்றும், அந்த உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தில் மக்கள் இணைந்து நேர்வழியும் இறை அருளும் பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். முன்னிலை வகித்த ஜனாப் J.S. சலீம் அஹ்மது சாஹிப் அவர்கள் நிகழ்ச்சிகளை இனிமையாக தொகுத்து வழங்கினார்கள்.

ஜனாப் M. மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்களின் நன்றியுரைக்கு பிறகு துஆவுடன் கருத்தரங்கு இனிதே நிறைவு பெற்றது.

தமிழ்நாட்டின் பல்வேறு ஜமாஅத்துகளிலிருந்து ஆண்களும், பெண்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(தகவல் : M. மன்சூர் அஹ்மது – இஸ்லாஹோ இர்ஷாது செலயர்)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நான் உண்மையைக் கூறுகின்றேன். அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்கள் ஆவர். எனது ஜமாஅத், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், திருக்குர்ஆன் மீதும் ஓர் உண்மையான முஸ்லிம் நம்பிக்கை கொள்வதைப் போன்று நம்பிக்கை கொள்கின்றது. ஓர் அணுவளவு கூட இஸ்லாத்திற்கு வெளியே அடியெடுத்து வைப்பது அழிவிற்குக் காரணமானதாக இருக்கும் என்று நான் உறுதி கொள்கின்றேன். எந்த அளவு அருள்களை ஒரு நபரால் பெற முடியுமோ, எந்த அளவு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முடியுமோ அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உண்மையான முறையில் கீழ்ப்படிந்து நடந்து, அன்னாரின் மீது முழுமையான அன்பு கொள்வதன் மூலமே பெற முடியும். அது அல்லாமல் பெற முடியாது என்பதே எனது கொள்கையாகும். பெருமானார் (ஸல்) அவர்களது வழியைத் தவிர இப்போது நன்மைக்கான எந்த வழியும் இல்லை. எனினும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இந்த உடலுடன் உயிரோடு வானத்திற்குச் சென்றுள்ளார்கள் என்று ஒருபோதும் என்னால் உறுதி கொள்ள முடியாது என்பதும் உண்மையாகும். ஏனென்றால், இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கடுமையான இழிவும் அவமரியாதையும் ஏற்படுகின்றது. ஒரு நொடிப்பொழுது கூட என்னால் இந்த இழிவை சகித்துக் கொள்ள முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது **63** -வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள் என்பது எல்லாருக்கும் தெரியும். தூய மதீனாவில் அவர்களது மண்ணறையும் இருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் அங்கு ஆயிரக்கணக்கான இலட்சக் -கணக்கான ஹாஜிகளும் செல்கின்றனர். இப்போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக அவர்களின் மரணத்தில் உறுதி கொள்வது அல்லது அவர்களுடன் மரணத்தை தொடர்புபடுத்திக் கூறுவது அவமரியாதை என்றால், பிறகு நான் கேட்கின்றேன். பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக இந்த அவமரியாதையை ஏன் நீங்கள் உறுதியாக நம்புகின்றீர்கள் ? ஆனால் நீங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள் என்று கூறி விடுகின்றீர்கள். மவ்லூது ஓதுபவர்கள் மிகவும் அழகிய குரலில் பெருமானார் (ஸல்) அவர்களது மரணம் தொடர்பான சம்பவங்களைக் குறிப்பிடுகின்றனர். காஃபிர்களுக்கு எதிரில் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள் என்பதை நீங்கள் மிகவும் திறந்த உள்ளத்துடன் ஏற்றுக் கொள்கின்றீர்கள். அவ்வாறிருக்க, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை ஏற்றுக் கொள்வதில் உங்களுக்கு என்ன இடையூறு இருக்கின்றது ? என்பது எனக்கு புரியவில்லை. அதைப் பற்றிக் கூறும்போது உங்களது கண்களில் கோபமும் குரோதமும் வெளிப்படுகின்றது. நீங்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் வஃபாத் என்ற சொல்லைக் கேட்டு அதுபோன்று கண்ணீர் வடித்திருந்தால் நமக்கு ஒருபோதும் துக்கம் ஏற்பட்டிருக்காது. ஆனால் வேதனை என்னவென்றால், உலகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த காத்தமுன்னபிய்யீன் அவர்கள் தொடர்பாக நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதை ஏற்றுக் கொண்டு, எந்த நபர் சுயமே தன்னைப் பற்றி, தான் பெருமானார் (ஸல்) அவர்களது காலணிகளிலுள்ள கயிற்றை அவிழ்ப்பதற்குக் கூட தகுதியில்லாதவன் என்று கூறுகின்றாரோ அவர் உயிருடன் இருப்பதாக உறுதியாக நம்புகின்றீர்கள். அவரைப் பற்றி ‘மரணம்’ என்ற சொல் நாவிலிருந்து வெளிப்பட்டு விட்டால் உங்களுக்கு ஆத்திரம் வருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் இன்று வரை உயிருடன் இருந்திருந்தால் அதில் எந்தக் குற்றமும் இல்லை. ஏனென்றால், அவர்கள் எத்தகைய மகத்தான நேர்வழியைக் கொண்டு வந்தார்கள் என்றால் அதற்கு இணையானது உலகில் இல்லை. அவர்கள் எத்தகைய செயல் அளவிலுள்ள நிலைமைகளைக் காட்டினார்கள் என்றால் ஆதமிலிருந்து இந்தக் காலம் வரை அதைப்போன்ற முன்மாதிரியையும், அதற்கு இணையானதையும் எவராலும் எடுத்துக் காட்ட முடியாது. பெருமானார் (ஸல்) அவர்களின் தேவை உலகிற்கும் முஸ்லிம் -களுக்கும் எந்த அளவு இருந்ததோ அந்த அளவு ஈஸா (அலை) அவர்களின் தேவை இருக்கவில்லை.

*(லெக்சர் லூதியானா. ரூஹானி கஸாயீன். தொகுதி **20** பக்கம் **258**)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad